**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

**முன்னிலை:– திருமதி. ஆ. சுபஸ்ரீ, எல்.எல்.எம்.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**திருப்பூர்.**

**2024–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 04 ஆம் நாள் புதன்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2055, குரோதி வருடம், ஆவணி திங்கள் 19 ம் நாள்**

**இடைக்கால மனு எண். 708/2023**
**இன்**
**அசல் வழக்கு எண். 254/2011**

1. J.தேவகி
2. M.வனிதா ..மனுதாரர்கள்/வாதிகள்

..எதிர்..

1. மாவட்ட ஆட்சியர், திருப்பூர்
2. வட்டாட்சியர் (வடக்கு), திருப்பூர்
3. J.ஜோதிமணி ...எதிர்மனுதாரர்/ 1 முதல் 3 பிரதிவாதிகள்
4. Y. காயத்திரி
5. (மைனர்) Y.ஹர்சித் (வயது 9)
   (இயற்கை காப்பாளர் தாயார் காயத்திரி)
6. (மைனர்) Y.சமுத்ரா
   (இயற்கை காப்பாளர் தாயார் காயத்திரி) ..எதிர்நோக்கும் தரப்பினர்கள்

இம்மனு கடந்த 19.07.2024ம் தேதியன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள்/ வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.P.கோபிநாத் அவர்கள் ஆஜராகியும், 5 மற்றும் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் நீதிமன்ற காப்பாளராக வழக்கறிஞர் திருமதி.இந்துமதி அவர்கள் ஆஜராகியும், 1,2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டும், 3,4 எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினர்களாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், மனு ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் ஆய்வில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

**உத்தரவு**

4 முதல் 6 எதிர்நோக்கும் தரப்பினர்களை அசல் வழக்கில் 4 முதல் 6 பிரதிவாதிகளாக சேர்க்கக் கோரி 1908–ம் ஆண்டு உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை 1 விதி 10 மற்றும் பிரிவு 151ன் கீழ் மனுதாரரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்** :

1ம் மனுதாரர் அசல் வழக்கில் வாதி. 2ம் மனுதாரர் வாதியின் சகோதரி. 3ம் பிரதிவாதி மனுதாரர்களின் தகப்பனார் ஜீவானந்தம் அவர்களின் இரண்டாம் மனைவி. 4ம் எதிர்மனுதாரர், வாதியின் இறந்து போன சகோதரர் யுவராஜின் மனைவி. 5 மற்றும் 6 மைனர் எதிர்மனுதாரர்கள் இறந்து போன யுவராஜின் குழந்தைகள். 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகைப் பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாரிசு சான்றிதழில் யுவராஜின் குழந்தைகளை சேர்க்கவில்லை. அசல் வழக்கில் 2 மற்றும் 3ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த எதிருரையில் யுவராஜின் வாரிசுகளை அவசிய தரப்பினர்களாக சேர்க்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளதாலும், அது பொறுத்து எழுவினா வனையப்பட்டுள்ளதாலும், அசல் வழக்கில் 4 முதல் 6 எதிர்நோக்கும் தரப்பினர்களை பிரதிவாதிகளாக சேர்க்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **5,6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :**

மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு பொய் மற்றும் மோசடியான ஒன்று. அது சட்டப்படியும் பொருண்மைப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் இளவர் எதிர்மனுதாரர்களை முழுமையாக சேர்க்கப்படவில்லை. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் அசல் வழக்கின் பரிகாரம் தெளிவாக குறிப்பிடப்படவில்லை. தாவா சொத்தில் 3ம் பிரதிவாதிக்கு பாகம் உள்ளதை தெரிந்து பின்பும், உத்தேசதரப்பினர்களை அசல் வழக்கில் சேர்க்கவில்லை. அவ்வாறு

சேர்த்தால் மனுதாரர்களின் பாகம் குறையும் என்ற எண்ணத்தில் உத்தேச தரப்பினர்களை சேர்க்காமல் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தில் உத்தேச தரப்பினர்களுக்கு பாகம் உள்ளதால் அவர்களை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்ப்பதற்கு ஆட்சேபனை இல்லை என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், " மனுதாரர் கோரிய படி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்".

6. <u>தீர்வு</u> :–

6.1 மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், எதிர்நோக்கும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அசல் வழக்கின் தீர்வுக்கு மனுதாரர் அவசியத்தரப்பினர்கள் என்பதால் இம்மனுவை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

6.2. 5 மற்றும் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதத்தை முன்வைக்க போதிய வாய்ப்பு அளித்தும் அவர்கள் தரப்பு வாதம் முன்வைக்கவில்லை.

6.3 மனுதாரர்கள் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது, கடந்த 25.09.2012ம் தேதியன்று இறந்து போன ஜீவானந்தம் அவர்களின் வாரிசுகள் வாதிகள் மற்றும் 3ம் பிரதிவாதி என்று விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இறந்து போன ஜீவானந்தத்தின் மகனான யுவராஜ் இறந்து விட்டார் என்பதும், அவரது வாரிசுகள் 4 முதல் 6 எதிர்மனுதாரர்கள் என்பதும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, இறந்து போன ஜீவானந்தத்தின் வாரிசுகளை கண்டறிவதற்கு எதிர்நோக்கும் 4 முதல் 6 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கிற்கு அவசியத்தரப்பினர்கள் என்று முடிவு செய்து

மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்**, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ஓம்/திருமதி. ஆ. சுபஸ்ரீ, L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.

**<u>மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :</u>** இல்லை.

ஓம்/திருமதி. ஆ. சுபஸ்ரீ, L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.

***<u>சீரான/வரைவு உத்தரவு</u>***
இ.ம.எண்.IA 708/2023
in
அ.வ.எண். 254/2022
நாள் : 04.09.2024
கூ.மா.உ.நீ. மன்றம்
திருப்பூர்.